T

# முதல் இடைப்பருவத் தேர்வு – 2023

## ஏழாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி　　தமிழ்　　மதிப்பெண்கள்:50

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5x1=5

1. நெறி என்னும் சொல்லின் பொருள் ________
   அ) வழி　ஆ) குறிக்கோள்　இ) கொள்கை　ஈ) அறம்
2. வானில் ________ கூட்டம் திரண்டால் மழை பொழியும்.
   அ) அகில்　ஆ) முகில்　இ) துகில்　ஈ) துயில்
3. 'வேட்கை' என்னும் சொல்லில் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு ________
   அ) அரை　ஆ) ஒன்று　இ) ஒன்றரை　ஈ) இரண்டு
4. வாழை, கன்றை ________
   அ) ஈன்றது　ஆ) வழங்கியது　இ) கொடுத்தது　ஈ) தந்தது
5. பேச்சுமொழியை ________ வழக்கு என்றும் கூறுவர்.
   அ) இலக்கிய　ஆ) உலக　இ) நூல்　ஈ) மொழி

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:** 5x1=5

1. ________ காந்தியக் கவிஞர் என்றும் அழைக்கப்படுகிறார்.
2. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் ________
3. தமிழின் கிளை மொழிகளுள் ஒன்று ________
4. வாய்மை எனப்படுவது ________
5. ஆறு அறிவுடைய மனிதர்களை ________ திணை என்பர்.

**இ) அ) சரியா, தவறா என எழுதுக** 2x1=2

1. மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறது.
2. எழுத்து மொழி காலம் கடந்தும் நிலைத்து நிற்கிறது.

**ஆ) பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக.** 3x1=3

1. பசு, விட, ஆறு, கரு = ________
2. ஆறு, மாசு, பாகு, அது =
3. பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு =

**ஈ) பின்வரும் கவிதைப் பாடலை அடி மாறாமல் எழுதுக:** 5

"எங்கள் தமிழ்" முதல் எட்டு அடிகள்

**உ) ஓரிரு சொற்களில் விடையளி:** 6x2=12

1. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாக கவிஞர் கூறுவன யாவை?
2. மொழியின் இரு வடிவங்கள் யாவை?

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



3. பேச்சுமொழி என்றால் என்ன ?
4. வட்டாரமொழி எனப்படுவது யாது ?
5. குற்றியலிகரம் என்றால் என்ன ?
6. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை ?
7. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர் ?
8. காடு – வரையறுக்க.

**ஊ) ஓரிரு தொடரில் விடை தருக. ஏதேனும் நான்கு மட்டும்** **4x3=12**

1. ஔகாரம் எப்பொழுது முழுமையாக ஒலிக்கும் ?
2. புலிகள் குறித்து நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளை தொகுத்து எழுதுக.
3. நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை ?
4. காட்டை இயற்கை விடுதி என்று கவிஞர் கூற காரணம் என்ன ?
5. கிளை மொழிகள் எவ்வாறு உருவாகின்றன ?
6. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.
7. தமிழில் அற இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றக் காரணம் என்ன ?

**எ) கீழ்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.** **1x6=6**

முன்னுரை – மொழி பற்றிய விளக்கம் – தாய்மொழி – தாய்மொழிப் பற்று – தாய் மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர் – சாதுவன் வரலாறு – நமது கடமை – முடிவுரை.

“தாய்மொழிப் பற்று”

-------

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com